அரசியல் சிந்தனை நூல்வரிசை - 2

# இந்தியாவும் தமிழ் மக்களும்

சி.அ.யோதிலிங்கம்

வெளியீடு
சமூகவிஞ்ஞான ஆய்வு மையம்

# முன்னுரை

அரசியல் சிந்தனை நூல் வரிசையில் இரண்டாவது நூலாக **"இந்தியாவும் தமிழ் மக்களும்"** என்ற நூல் வெளிவருகின்றது. வாசகர்கள் முதலாவது நூலுக்கு சிறந்த ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர். அதனை இவ் இரண்டாவது நூல் உட்பட நாம் தொடராக வெளி யிட இருக்கும் நூல்களுக்கும் தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களின் அரசியல் நிலை நின்று இந்தியா வுடனான உறவுகளை கையாளுவது எப்படி? என்பது இன்று முக்கியமாகப் பேசப்பட வேண்டிய விடயமா கின்றது. இச் சிறுநூல் அதற்கான விவாதத்தை தொடக்கி வைக்கும் என நம்புகின்றோம்.

இந்திய நலன்களுக்கோ, அதன் தேசிய பாதுகா-ப்பிற்கோ தமிழ் மக்கள் ஒருபோதும் எதிராக இருக்கப் போவதில்லை. ஆனால் தமிழ் மக்களின் நலன்களு-க்கும் இங்கு பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கரிசனையாகும்.

**"ஆயிரம் பூக்கள் மலரட்டும்"** என்ற வகையில் தொடர்ந்து விவாதங்களை நடாத்துவோம்.

சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம்

கடந்தபங்குனிமாதம்இந்தியவெளியுறவுச்செயலர்சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பியிருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பனவற்றினையும் அரசதரப்பையும் சந்தித்துப் பேசியிருக்கின்றார். அவர் வந்திருந்த காலம் மிகவும் முக்கியமானது. ஜெனிவா விவகாரம் ஒரு பக்கத்தில் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்தது. அரசாங்கம் கேட்கும் கால அவகாசம் தொடர்பாக பலத்தவாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வந்தன. தமிழ் மக்கள் காணிப் பறிப்பு, காணாமல் போனோர் விவகாரம் என்பவற்றிற்காக ஆங்காங்கே போராட்டங்களை நடாத்திக் கொண்டிருந்தனர்.

தற்போது போராட்டங்கள் 50 நாட்களையும் தாண்டிச் சென்றுகொண்டிருக்கின்றன. தென்இலங்கையில் மகிந்தர் மீண்டும் பலம் பெற்ற ஒருவாக எழுச்சியடைந்து வருகின்றார். மே தினத்தில் தனது அசுர பலத்தை வெளிக்காட்டியிருக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைத் தீவினை மையமாக வைத்த வல்லரசுகளின் பனிப்போரும் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. தென்னிலங்கையில் சீனாவில் அதிகரித்த பிரசன்னத்தை இந்தியாவோ அமெரிக்காவோ விரும்பவில்லை. இந்தியா அதனை அறவே விரும்பவில்லை. ஆனாலும் தாங்களும் செயற்படக்கூடியதாக இருக்கின்றது என்பதனாலும், தாங்களே உருவாக்கிய அரசாங்கம் என்பதினாலும் இந்தியாவும் அமெரிக்காவும் சகித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தியா வடகிழக்கிலாவது தன்னுடைய செல்வாக்கைப் பலப்படுத்தலாம் என நினைக்கின்றது. திருகோணமலையை மையமாக வைத்து வடகிழக்கு அபிவிருத்திக்கென திட்டங்களைச் செயற்படுத்த முனைகின்றது.

இந்தச் சூழலில் தான் ஜெய்சங்கரின் பயணம் இடம்பெற்றது. அவருடைய நோக்கம் மிகத் தெளிவானது. **வடகிழக்கை முழுமையாக இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதன் மூலம் இலங்கை**

**மீது செல்வாக்குச் செலுத்துவது, தான் மேற்கொள்ள இருக்கும் வட கிழக்குச்சார்ந்ததிட்டங்களுக்குத்தமிழ்த்தரப்பின்ஒத்துழைப்பைப்பெற்றுக் கொள்வது, தமிழ்த்தரப்பு அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்காமல் பார்த்துக் கொள்வது, அரசியல் தீர்வு என்ற பெயரில் ஏதாவது ஒன்றை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுப்பது** என்பவையே அவையாகும்.

இந்த விடயங்களை இந்திய வெளியுறவுச் செயலர் கச்சிதமாக நிறைவேற்றியுள்ளார் என்றே கூறவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடனான சந்திப்பின் போது அவர் இரண்டு விடயங்களை அழுத்த மாக குறிப்பிட்டார். ஒன்று கள நிலைமைக்கு வாய்ப்பான விடயங் களையே கோரிக்கையாக வைக்க வேண்டும். அவற்றிலும் எல்லா வற்றையும் ஒரேயடியாகக் கேட்காமல் முன்னுரிமைப்படி கேட்க வேண்டும். இதன்மூலம் சமஸ்டி, வடகிழக்கு இணைப்பு என்கின்ற கோரிக்கைகள் கள நிலைமைக்கு வாய்ப்பற்றவைகள் எனக் கூறி அவற்றை நிராகரித் தார். முன்னுரிமைக் கோரிக்கையாக அரசியல் தீர்வு பற்றிய இடைக்கால அறிக்கையை சுமந்திரன் கூறியதனால் அதனை ஏற்றுக் கொண்டு அர சாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகக் கூறினார். இதன் அர்த்தம் 13 தான். இடைக்கால அறிக்கை சமஸ்டியோ, வடகிழக்கு இணைப்போ அல்லாமல் ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்து மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் கொடுப்பது பற்றியே குறிப்பிடுகின்றது.

உண்மையில் இந்தத் தீர்வுதான் இந்தியா– அமெரிக்கக்கூட்டு தமிழ் மக்களுக்கு சிபார்சு செய்துள்ள அரசியல் தீர்வு. துரதிஸ்டம் என்ன வென்றால் சம்பந்தன் தலைமையும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது என்பதே. இந்த அரைகுறைத் தீர்வைக் கூட அறிமுகப்படுத்துவதற்கு மகிந்தர் அணி தடையாக இருக்கின்றது என்பது தான் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் கவலை.

இரண்டாவது தமிழ்த்தரப்பு தீவிர நிலைப்பாட்டை எடுத்தால் மகிந்தர் வந்துவிடுவார். நீங்கள் விடயங்களை அவருடன் தான் கையாள

வேண்டிவரும் என அச்சுறுத்தியமையாகும். இதனை இவர் மட்டுமல்ல இலங்கைக்கு வருகின்ற இராஜதந்திரிகளும், தென்னிலங்கையிலிருந்து வருகின்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள் எனத் தங்களைக் கூறிக் கொள்பவர்களும் கூறுகின்றனர். சிறு பிள்ளைகளை தாய்மார் பேய்வரும் என பயமுறுத்துவது போலத் தான் இது உள்ளது. மகிந்தர் வந்தால் உங்களால் எதையாவது பெற முடியுமா? என்றும் ஜெய்சங்கர் கேட்டிருக் கின்றார் .

இதனைக் கூறும் போது சம்பூர் அனல் நிலையத்திற்கு தமிழ்த் தரப்பு ஒத்துழைப்புத் தரவில்லை. எதிராக நின்றது என்பதையும் அவர்கூறத் தவறவில்லை. இது விடயத்தில் சம்பந்தன் தலைமையின் இரட்டை நிலைப்பாட்டிற்கும் ஒரு அடி கொடுத்தார். மறுபக்கத்தில் அபி விருத்தித் திட்டங்கள் பற்றி தமிழ்த்தரப்புடனும் பேசுவது, தமிழ்தரப்பையும் பங்காளியாக்குவது என்பது பற்றி எதையும் பேசவில்லை. இந்தியாவின் திட்டங்களை எந்தவித கேள்வியுமில்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அதிகாரத்தொனியே மேலோங்கியிருந்தது. உங்களுக்கு ஆட் சேபனைகள் இருந்தால் வெளிப்படையாகக் கூறுங்கள். இரட்டை நிலைப்பாடு வேண்டாம் என அவர் கூறிய போதும் அதன் உள்ளார்ந்த தொனி எந்தவித கேள்வியுமில்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே .

இந்தியாவின் அபிவிருத்திச் திட்டங்களையோ, இந்திய தேசிய பாது காப்புக் கருதி மேற்கொள்ளும் திட்டங்களையோ தமிழ் மக்கள் ஒரு போதும் எதிர்க்கப்போவதில்லை. ஆனால் இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை ஒன்று அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்த் தரப்பையும் பங்காளியாக்குவது. இரண்டாவது தமிழ்த் தேசத்திற்கு பாதிப்பு ஏற்படாத நிலையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது

இந்தியாவிற்கு தென்னிலங்கையில் பெரிய இடமில்லை. அங்கு சீனா ஆதிக்கம் செலுத்துகின்றது. சீனாவுடனான அம்பாந்தோட்டை

துறைமுகம் தொடர்பான ஒப்பந்தத்தையோ, கொழும்புத் துறைமுகம் சம்பந்தமான ஒப்பந்தத்தையோ இந்தியா ஏற்றிருக்கவில்லை. பலவழி களிலும் தனது அதிருப்தியை தெரிவித்த போதும் இலங்கை ஒப்பந் தங்களை மேற்கொண்டது. இவற்றைத் தடுக்கும் திராணி இந்தியாவிற் கும் இருக்கவில்லை. அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்தி களுக்கும் இருக்கவில்லை. இலங்கையின் கள யதார்த்தம் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் சீனாவின் ஆதிக்கத்தை அகற்ற முடியாது என்பதே! சீனாவை அகற்றினால் இலங்கையின் பொருளாதாரமே வீழ்ச்சியடைந்து விடும் என்ற நிலையே உள்ளது.

பொருளாதாரக் காரணிகளுக்கு அப்பால் மகிந்தரின் எதிர்ப்புக் களை சமாளிக்கவும், நாம் அமெரிக்க- இந்தியாபக்கம் முழுமை யாகச் சாயவில்லை என்பதைக் காட்டவும் சீனாவுடன் நல்லுறவைப் பேணவேண்டிய கட்டாய நிலை மைத்திரி ரணில் அரசாங்கத்திற்கு உள்ளது. அதேவேளை இந்திய- அமெரிக்கக் கூட்டுடனான உறவிற்கும் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்திய அமெரிக்கக் கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையே ஒரு சமநிலையைப் பேண மைத்திரி- ரணில் அரசாங்கம் விரும்புகின்றது எனலாம். இதன் அர்த்தம் இந்திய- அமெரிக்கக் கூட்டின் பொம்மையாக வரத்தயாரில்லை என்பதே. இதன் நிமித்தம் வடகிழக்கில் குறிப்பாகத் திருகோணமலையில் இந்தியாவின் செயற்திட்டத்திற்கு மைத்திரி- ரணில் அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. இந்தியா முழு இலங்கையையும் தனது செல்வாக்கின் கீழ் வைத்திருக்கின்ற கனவிலேயே இருந்தது. இது சரிவராது எனத் தெரிய வரவே தற்போது வடகிழக்கினையாவது முழுமையாக தன் செல் வாக்கின் கீழ் வைத்திருக்க விரும்புகின்றது. வடகிழக்கின் செல்வாக் கினை பேண வேண்டும் என்றால் தமிழ்த்தரப்பின் ஒத்துழைப்புத் தேவை. ஜெய்சங்கர் அதனைக் கோரி நின்றார். இங்கே எழும் கேள்வி இந்த ஒத்து ழைப்பு என்பது வெற்றுக் காசோலையில் கையொப்பமிடுவதாக இருக்க வேண்டுமா? என்பதே!

இங்கே தான் முன்னரே குறிப்பிட்டது போல இந்தியாவின் திட்டங்களில் தமிழ் மக்களையும் பங்காளியாக்குவது, தமிழ்த் தேசத்தைப் பாதிக்காத திட்டங்களை மேற்கொள்வது என்பன முக்கியமானவையாகும் முதலாவது விடயம் தமிழ் மக்களின் சுய மரியாதையுடன் தொடர்புடையது. இந்திய அரசாங்கமும் சிறிலங்கா அரசாங்கமும் மட்டும் இணைந்து செயற்படுத்தும் திட்டங்களை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. மூன்று தரப்பும் இணைந்து செயற்படுவதாக இருக்கலாம். தமிழ் மக்களின் பங்களிப்பு நிச்சயமாகத் தேவையானது.

இரண்டாவது தமிழத் தேசத்தை பாதிக்கின்ற திட்டங்களை தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பாக தமிழ் மக்களுடன் எந்த கலந்தாலோசனையும் மேற் கொள்ளப்படவில்லை. சிறீலங்கா அரசும் சிங்கள அரசும் தங்களுக்குள் மட்டும் பேசி உருவாக்கிய திட்டம் அது. தமிழ் மக்களுக்கு எந்தப் பங்கும் இருக்கவில்லை. அது தவிர தமிழ்ப்பிரதேசத்தை சூழலியல் ரீதியாகப் பாதிக்கும் திட்டம். தமிழ்ப்பிரதேசத்தை அழிக்கும் திட்டத்தை தமிழ் மக்களினால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் ஒரு பூர்வீக தேசிய இனம். இந்தியா தமிழ் மக்களிடம் ஒத்துழைப்பைக் கேட்பதற்கு முன்னர் தமிழ் மக்களின் சுயமரியாதைக்கான கௌரவத்தை முதலில் கொடுக்கவேண்டும்.

வடகிழக்கு இணைப்பு விவகாரம் இலங்கை- இந்திய ஒப்பந்தத் தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இது விடயத்தில் ராஜீவ் காந்தியினாலும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. இந்தியா இப்பொறுப்பிலிருந்து கழர முயற்சிப்பது பெரியநாட்டிற்கு நல்லதல்ல. இலங்கை- இந்திய ஒப்பந்தம் தற்போது அமுலில் இருப்பதாகத்தான் இந்தியா கூறுகின்றது. இலங்கை அரசாங்கத்திற்கும் அது தொடர்பான அமுத் தங்களைக் கொடுத்து வருகின்றது ஆனால் அதிலுள்ள முக்கியமான விடயத்திற்கு அழுத்தம் கொடுக்கப் பின்நிற்கின்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் புதுடில்லியில் பிரபாகரனுடன் ராஜீவ்காந்தி நேரடியாக பேச்சுவார்த்தை யில் ஈடுபட்ட போது வட– கிழக்கு தற்காலிக இணைப்புப் பற்றி பிரபாகரன் அதிருப்தி தெரிவித்திருந்தார். அதற்கு ராஜீவ் காந்தி "அது நிரந்தர இணைப்பாக இருக்கும் தான் உத்தரவாதம் தருகின்றேன் என்னை நம்புங்கள்" எனக் குறிப்பிட்டார். இன்று அதையெல்லாம் இந்திய அர சாங்கம் காற்றில் பறக்க விட்டுள்ளது. சிங்களப் பெரும் தேசிய வாதம் ஏற்காத ஒன்றிற்கு அழுத்தம் கொடுக்க அது விரும்பவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வட– கிழக்கு இணைப்பு என்பது தமிழ் மக்களின் கூட்டிருப்பையும் கூட்டுரிமையையும் கூட்டடையாளத் தையும் பேணுவதற்கு தவிர்க்க முடியாத ஒன்று. இது பேரம் பேசலுக்கே அப்பாற்பட்டது. இணைந்த வடகிழக்கில் முஸ்லீம்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக அவர்களுடன் பேசுவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றனர். அவர்கள் சம்மதிக்காவிட்டால் வட கிழக்கிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களை நிலத்தொடர்பற்ற வகையிலாவது இணைத்து தாயக ஒருமைப்பாட்டை பேணுவது அவசியமானது. சம்பந்தன் தலைமை இதனை இந்தியத்தரப்பிடம் தெளிவாக முன்வைத்திருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரத்தை சம்பந்தனோ, சுமந்திரனோ இந்திய வெளியுறவுச் செயலரிடம் எழுப்பவில்லை. சுரேஸ் பிரேமச்சந்திரனே எழுப்பியிருந்தார். சுரேஸ்பிரேமச்சந்திரன் இதனை எழுப்பிய போது அதற்குத் துணையாகக் கூட சம்பந்தனோ, சுமந்திரனோ குரல் எழுப்பவில்லை. அவர்கள் அமைதியாகவே இருந்தனர். இந்திய வெளியுறவுச் செயலர் சுரேஸின் கோரிக்கையை நிராகரித்தார். இப்போது இருக்கும் வாய்ப்பினை தீவிர நிலைப்பாடு எடுத்துக் குழப்ப வேண்டாம் எனக் கூறினார். சம்பந்தனும், சுமந்திரனும் இதனை ஏற்றுக் கொண்ட நிலையே காணப்பட்டது. இந்திய வெளியுறவுச் செயலருக்கு

வடக்கு– கிழக்கு இணைப்புக் கோரிக்கை ஒரு தீவிர கோரிக்கையாகத் தோன்றியது.

வடக்கு– கிழக்கு இணைப்பு விவகாரம் இந்திய நிலையிலிருந்து பார்க்கும் போது கூட இந்தியாவிற்கு சாதகமானது. தென்னிலங்கையில் இந்தியாவிற்கு இடமில்லை வடகிழக்கில் மட்டும் தான் இடமிருக்கின்றது குறிப்பாக திருகோணமலை இந்திய தேசிய பாதுகாப்பிற்கு மிக முக்கிய மானது. இணைந்த வடகிழக்கு இருக்கும் போது மட்டுமே இந்தியா வினால் அங்கு தனது செல்வாக்கினை உயர்த்திக் கொள்ள முடியும். இந்தப் பலத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தெற்கு நோக்கியும் நகரமுடியும்.

தெற்கில் மலையக மக்களையும் அரசியல் ரீதியாகப் பலப்படுத் தினால் அங்கும் தனது செல்வாக்கினை உயர்த்திக் கொள்ள முடியும். இந்தியா சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்களைப் பலவீனப்படுத்தியது. அது முழுமலையகமக்களையும் இந்தியாவிற்கு அழைத்திருக்க வேண்டும். அல்லது அனைவரையும் இலங்கையிலேயே விட்டிருக்க வேண்டும். ஒரு பகுதியைவிட்டு விட்டு மறுபகுதியை எடுத்ததினால் மலையக மக்கள் பலவீனமாகியுள்ளனர். இதனை அமைச்சர் மனோகணேசன் ஒரு தடவை வெளிப்படையாகவே கூறினார்.

மறுபக்கத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் வட–கிழக்கு தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தியது. ஓற்றையாட்சிக்குட்பட்ட, வட–கிழக்கு இணைக்கப்படாத ஒரு தீர்வினை தமிழ் மக்களின் தலையில் கட்டியது. இரண்டு ஒப்பந்தங்களிலும் சம்பந்தப்பட்ட தரப்புக்களான மலையக மக்களையோ, வடகிழக்கு மக்களையோ ஒப்பந்தத்தில் பங்காளியாக்க விரும்பவில்லை. அவர்களின் சார்பில் தானே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இது இயற்கை நீதிக்கு முற்றிலும் முரணானது. சரி குறைந்தபட்சம் நம்பிக்கைப் பொறுப்பாளன் என்ற அந்தஸ்தினையாவது சரியாகப் பேணியிருக்கலாம். அதனையும் செய்ய

வில்லை. மொத்தத்தில் தனது நலன்களுக்காக இரு மக்கள் கூட்டங் களையும் பலிக்கடாக்களாக்கியது மலையக மக்களோ, வடகிழக்கு மக்களோ சுயாதீனப்பலத்துடன் இருப்பதை இந்தியா ஒரு போதும் விரும்பியதில்லை.

இன்று சீனா மலையகத்திலும் கால் வைக்கப்பார்க்கின்றது. இலங்கையின் தேயிலையை தான் கொள்வனவு செய்யப் போவதாகக் கூறியுள்ளது. தமிழ் மக்களையும், மலையக மக்களையும் பல வீனமாகவைத்துக்கொண்டு இந்தியா ஒருபோதும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முடியாது. சிங்களத்தரப்பு இந்தியாவை ஒரு மரபு ரீதியான எதிரியாகவே பார்க்கின்றது. இதனால் ஒரு போதும் அங்கிருந்து இந்தியாவிற்கு ஆதரவு கிடைக்கப்போவதில்லை. இந்த உண்மை இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு தெரியாதென்றும் கூறிவிட முடியாது. அவர்கள் தெரிந்து கொண்டுதான் எல்லாவற்றையும் செய் கின்றனர். இந்தியா தன் தலையில் தானே மண் அள்ளிப் போடுகின்றது.

வட– கிழக்கில் இந்தியா ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்றால் வெறுமனவே சிங்கள அரசின் ஆதரவு மட்டும் போதுமானதல்ல. தமிழ் மக்களின் ஆதரவே முக்கியமாகத்தேவை. தமிழ் மக்களின் அபிலா சைகளைப் புறக்கணித்துக் கொண்டு அவர்களின் ஆதரவை ஒரு போதும் பெற்றுவிடமுடியாது. எமது போராட்டத்தை இந்தியா அழித்துள்ளது, எமது அபிலாசைகளைக் கொச்சைப்படுத்துகின்றது, என்ற தார்மீகக் கோபம் தமிழ் மக்களிடம் நீண்டகாலமாகவே உண்டு. அதனைச் சரிசெய்யாமல் இந்தியாவினால் ஒரு போதும் தமிழ் மக்கள் மீது செல்வாக்குச் செலுத்த முடியாது.

இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நிலைமைகளை சரியாகக் கணிக்கத்தவறினால் தங்களது முயற்சிகளில் மீண்டும் மீண்டும் தோல் விகளையே சந்திக்க வேண்டிவரும்.

இனி அரசியல் தீர்வு பற்றிய விடயத்திற்கு வருவோம். அரசியல் தீர்வு பற்றிய உபகுழுக்களின் அறிக்கைகளை வைத்துக் கொண்டு அரசியலமைப்புப் பேரவை ஒரு இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளது. அந்த அறிக்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சித்தார்த்தன் தலைமையிலான உபகுழுவின் அறிக்கையே முன்வைக்கப் போகின்றது.

முன்னரே கூறியது போல வட– கிழக்கு இணைப்பும் இல்லாமல் சமஸ்டியும் இல்லாமல் மகாணசபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரம் கொடுப்பது போல ஒரு தோற்றம் தெரிகின்ற தீர்வே அரசியல் தீர்வாக முன்வைக்கப்படப்போகின்றது. உண்மையில் இந்திய– அமெரிக்க கூட்டுத் தமிழ் மக்களுக்கு தீர்வாக முன்வைப்பது இது தான். முன்னரே கூறியது போல சம்பந்தன் தலைமையும் நீண்ட நாட்களுக்கு முன்னரே இதனை ஏற்றுக் கொண்டு விட்டது.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மாற்றாதாவரை மத்தியஅரசு சிங்கள பௌத்த அரசாகவே இருக்கப்போகின்றது. மத்திய அரசு சிங்கள பௌத்த அரசாக இருக்கும் வரை எந்த அதிகாரப்பகிர்வை வழங்கினாலும் அது ஒரு போதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை.

இரண்டாவது விடயம் வடக்கு–கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையில் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் கிழக்குத் தமிழ் மக்களுக்கு அது பாதகமானதாகவே அமையும். அங்கு தமிழ்த்தரப்பு அதிகாரமற்ற தரப்பு. தனித்து தமிழ் மக்கள் கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தைப் பெறும் நிலையும் அங்கு இல்லை.

அதிகாரமற்ற நிலையில், அதிகாரங்களைப் பெறும் சிங்கள, முஸ்லீம் தரப்புகள் தமிழ் மக்களைப் புறக்கணிக்கவே முயற்சிக்கும். இது கிழக்கு தமிழ் மக்களின் நிலையை இன்றுள்ளதைவிட மிகவும் மோசமானதாகவே மாற்றும். கிழக்குத் தமிழ் மக்களின்

இன்றைய நிலை மிகவும் மோசமானது. மேலே கூறியது போல கிழக்கு தமிழ் மக்களிடம் இன்று அதிகாரமில்லை. அதிகாரம் முஸ்லீம்களிடமும் சிங்கள மக்களிடமுமே உள்ளது. இரு தரப்பும் கிழக்குத் தமிழ் மக்களின் மீது ஒரு தாக்குதல் யுத்தத்தினை தொடுத் துள்ளன. இது தொடர்பாக தற்காப்பு யுத்தத்தினை கூட நடாத்த முடியாத நிலையில் கிழக்குத் தமிழ் மக்கள் உள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டமே சற்றுப்பலமான நிலையில் உள்ளது. இது பலமான நிலையில் இருந்தால் தான் திருகோணமலை மாவட்டத்திலும், அம்பாறை மாவட்டத்திலும் எஞ்சியிருக்கின்ற தமிழ்ப் பிரதேசங்களையாவது பாதுகாக்க முடியும். ஆனால் இன்று மட்டக்களப்பு மாவட்டமே தன்னைப் பாதுகாக்கத் திணறுகின்றது.

வடக்கு மக்களுக்கு வெளிப்படையான அதிகாரம் இல்லா விட்டாலும் மறைமுக பாதுகாப்பு உண்டு. சர்வதேச கண்காணிப்பு இருப் பதினாலேயே அது ஏற்படுகின்றது. கிழக்கில் அதுவும் இல்லை. சர்வ தேசக் கண்காணிப்பு அங்கு அறவே கிடையாது. வெளிநாட்டு இராஜ தந்திரிகள் கிழக்கிற்கு வருவதில்லை. கூட்டமைப்பின் தலைமையும் வருமாறு கேட்பதில்லை. வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் போது கூட்டமைப்பின் தலைமை கிழக்கின் பிரதிநிதிகளை அழைத்துச் செல் வதில்லை. தாங்களும் கிழக்குப் பிரச்சினையை முன்வைப்பதில்லை. மொத்தத்தில் கிழக்கு இருட்டிற்குள் விடப்பட்டுள்ளது.

உண்மையில் கிழக்குத் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு சிங்கள, முஸ்லீம் தரப்புகள் மட்டும் காரணமல்ல. சம்பந்தன் தலைமையும் ஒரு காரணம். கிழக்கில் தமிழ் மக்கள் பலவீனமாக இருப்பது இந்திய நலன்களுக்கும் நல்லதல்ல. புதிய தீர்வு யோசனை தமிழ் மக்களை முன்னரை விட மோசமான நிலைக்குத் தள்ளப் போகின்றது.

இங்கு எழும் முக்கிய கேள்வி தமிழ்த்தரப்பு என்ன செய்யலாம் என்பதே! இந்திய அணுகுமுறை தவறானது, அது தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருபோதும் தீர்க்கப் போவதில்லை என்பதை இந்திய அரசிற்கு மிக அழுத்தமாகச் சொல்ல வேண்டிய பொறுப்பு தமிழ்த்தரப் பிற்கு உண்டு. தேசம், இறைமை, சுயநிர்ணயம், சமஸ்டி என்ற அடிப் படையிலேயே தீர்வு அமைய வேண்டும் என்பதை அழுத்தம் திருத்த மாகச் சொல்ல வேண்டும். இந்தியா தன்னை மாற்றிக் கொள்ள வில்லையென்றால் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இந்தியாவிற்குக் கிடைக்காது என்பதையும் கூற வேண்டும்.

இதன் முதற்கட்டமாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு யோசனை களை மேலும் செப்பனிட்டு தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் மத்தியில் பேசுபொருளாக்கி அது பற்றிப் பொதுக் கருத்தினை உருவாக்க வேண்டும். அந்தப் பொதுக்கருத்தினை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும்.

இந்திய மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கவல்ல சக்தியாக இருப்பது தமிழகம் தான். எனவே தமிழகமக்கள் மத்தியில் தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு யோசனையை பேசுபொருளாக்க வேண்டும். இது விடயத்தில் நிலம், புலம், தமிழகம் என்பவற்றிற்கிடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் தேவை.

துரதிஸ்டவசமாகத் தமிழ் மக்கள் பேரவையின் யோசனை திருத் தின் பின்னர் இன்னமும் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை. இது சமூகப் பொறுப்பின்மை கூட்டமைப்பின் தலைமை போல தமிழ் மக்கள் பேரவையிடம் உள்ளதா? என்னற கேள்வியை எழுப்புகின்றது.

தமிழ் மக்களுக்கு அது கஸ்டமான காலம் தான். எனினும் அதனைக் கடந்து தான் ஆக வேண்டும்

# இனப்பிரச்சினை என்றால் என்ன?

இலங்கையில் இனப்பிரச்சினை உள்ளது என எல்லோரும் கூறு கின்றனர். ஆனால் இனப்பிரச்சினை என்றால் என்ன எனக் கேட்டால் எவரிடமும் போதிய விளக்கம் இல்லை. இது தெளிவில்லாததினால் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் பல குழப்பமான விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. நோய் என்ன வென்று தெரிந்தால் தான் அதற் கான மருத்துவத்தை சீராக செய்ய முடியும். அதே போல இனப்பிரச்சினை என்னவென்று தெரிந்தால் தான் அதற்கான தெளிவான தீர்வையும் முன்வைக்க முடியும்.

இலங்கை தமிழ் மக்கள் நீண்டகாலமாக தேசம் அல்லது தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு தேசம் அல்லது தேசிய இனமாக வாழ்ந்து வருதல் அழிக்கப்படுவது தான் இனப்பிரச்சினை யாகும். ஒரு தேசத்தை அல்லது தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களாக இருப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாச் சாரம் என்பனவையே. இவற்றுடன் மக்கள் கூட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். இவை அழிக்கப்படுவதுதான் இனப்பிரச் சினையாகும்.

ஒரு இனத்தை அழிக்கவேண்டுமானால் அந்த இனத்தின் பூர்வீக நிலத்தை அழித்தால், அந்த இனம் பேசும் மொழியை அழித்தால், அந்த இனத்திற்கு வாழ்வாதாரமாக இருக்கின்ற பொருளாதாரத்தை அழித்தால் அந்த இனத்தை ஒன்றிணைக்கின்ற கலாச்சாரத்தை

அழித்தால், அந்த இனம் அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டத்தை கொத்து கொத்தாக கொலை செய்தால் அந்த இனம் அழியும்.

இலங்கையின் வரலாற்று ரீதியாகவே இந்தத் தூண்கள் அழிக் கப்படுகின்றன. தமிழ் மக்களின் இதுவரை காலப் போராட்டம் என்பது இத்தூண்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கின்ற தற்காப்புப் போராட்டமே. இப்போராட்டம் அரசியல் வழி, ஆயுதவழி என அறுபது வருடங் களுக்கு மேலாக தொடர்கின்றது.

இங்கு எழும் அடுத்த கேள்வி இலங்கை அரசுஏன் இந்த அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்பதே. அரசுருவாக்கத் தின்படி இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது. ஏனையவர்கள் வாழ்ந்து விட்டுப் போகலாம். அவ்வாறு வாழ விட்டதே சிங்கள மக்களின் பெருந்தன்மை. தமிழர்கள் ஒரு தேசமாக தம்மை அடையாளப்படுத்தக்கூடாது. மாறாக தமிழ் மக்கள் தேசமாக தம்மை அடையாளப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். இதற்காகவே தொடர்ச்சியாக இவ்வாறான அழிப்பு நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபடுகின்றது.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இவ்வழிப்பு நடவடி–க்கைகளிலிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதாக அமைய வேண்டும்.

# பூகோள நலனும் பிராந்திய நலனும் ஒன்றினையும் புள்ளி

மேற்குலகின் பூகோள நலனும், இந்தியாவின் பிராந்திய நலனும் ஒன்றிணையும் ஒரு தற்காலிகப் புள்ளி காணப்படுகின்றது. அந்தப் புள்ளியை பாது காக்கும் அளவுக்கே புதிய அரசியல் யாப்பில் தமிழருக் கான தீர்வு முன் வைக்கப்படும். பதவியிலிருக்கும் சிங்களத் தலைவர்களுக்கு, பூகோளம் தழுவிய இந்தப் பிராந்தியம் சார்ந்த புவிசார் அரசியல் யாதார்த்தம் நன்கு புரியும் என்பதால், தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைப்பதில் தமது ஆட்சிக்கு நெருக்கடி இருக் கின்றது என்பதைப் பெரிதுபடுத்திக் காட்டி அதன் மூலம் மேற்படி அரசுகளின் ஆதரவுடன் தமிழ் மக்களுக் கான தீர்வை அற்பமாகச் சுருக்கி தம் இலக்கை அடைந்திடுவர்.

மு. திருநாவுக்கரசு
முன்னாள் வரலாற்றுத்துறை
விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சுயாதீன ஆய்வாளர்